மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(பகல் 10.40)

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (திருத்தச்)சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்.

திரு. கே. குப்புசாமி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1983 ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 24 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு ** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்".

திரு மா. சின்னராசு: தலைவர் அவர்களே, இத்தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக நாட்டில் சம்பிரதாயங்களும், மரபுகளும் பின்பற்றப்படுவது வழக்கம். சட்டமன்ற ஜனநாயக முறைக்கு ஏற்ப, இந்த ஆட்சியினுடைய சீரிய திட்டங்களை, சாதனைகளை, எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக நம்முடைய ஆளுநர் அவர்களின் உரை அமைந்திருக்கிறது என்பதை முதற்கண் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் இருக்கிற 4½ கோடி தமிழர்களின் உணர்வில், உள்ளத்தில், உதிரத்தில் இரண்டறக் கலந்திருக்கும் மொழியாம் தமிழ் மொழி. தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்டிராத ஆளுநர் அவர்கள் தமிழில் பேசியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒன்றாகும். இது எதை காட்டுகிறது என்றால் தமிழர்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தமிழினுடைய வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை தழைத்தோங்க தமிழகத்திலே முயற்சி எடுத்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அண்ணாவின் இருமொழிக் கொள்கை இங்கு மட்டுமில்லாமல், பிற மாநிலங்களிலும் பின்பற்றக்கூடிய ஒரு நிலை உருவாகி இருப்பதை நாம் யாரும் மறந்துவிட முடியாது. தமிழை பழித்தவனை தாய் தடுத்தாலும் விடாது இமயம் வரைசென்று இலச்சினை பொறித்த வரலாறு தமிழருடைய வரலாறு. கல் தோன்றி மண் தோன்றா காலத்திலும் முன்தோன்றிய மூத்த மொழியின் வளர்ச்சியை பழிக்கிற முயற்சியில் யார் ஈடுபட்டாலும்

**156 ம் பக்கங்களில் ஆளுநர் இணைப்பு உரை II-ஆக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 167 ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.